# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2102 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

### இலங்கை நிரந்தரக் கடற்படை

பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் (CADET)

1. இலங்கை நிரந்தரக் கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் பிரிவுகளில் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) நிறைவேற்றுப் பிரிவு ;
(ஆ) ஒழுக்காற்றுப் பிரிவு ;
(இ) வழங்கல் பிரிவு ;
(ஈ) மரீன்படைப் பிரிவு ;
(உ) பொறியியல் பிரிவு ;
(ஊ) மின் பொறியியல் பிரிவு.

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள் :**

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தபட்சம் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) பின்வரும் பிரிவுகளுக்காக க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல்.

(1) நிறைவேற்றுப் பிரிவு: க. பொ. த. உயர் தரத்தில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களை பயின்றிருத்தல்;

(2) ஒழுக்காற்றுப் பிரிவு, மரீன் படைப் பிரிவு : க. பொ. த. உயர் தரத்தில் வணிகம், தொழில்நுட்பம் அல்லது கலைப் பிரிவு ஆகியவற்றில் கற்றிருத்தல்.

(3) வழங்கல் பிரிவு : க. பொ. த. உயர் தரத்தில் வணிகப் பிரிவில் தோற்றியிருத்தல்.

(4) பொறியியல் பிரிவு : க. பொ. த. உயர் தரத்தில் பௌதீகவியல், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தோற்றியிருத்தல்.

(5) மின்/ பொறியியல் பிரிவு : க. பொ. த. உயர் தரத்தில் பௌதீகவியல், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தோற்றியிருத்தல்.

(இ) க. பொ. த. உயர் தரத்தில் பொது அறிவுப் பரீட்சையில் 30 இற்கு குறையாத புள்ளியைப் பெற்று இருத்தல்.

(ஈ) க. பொ. த. (உயர் தர பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையைப் பெற்று இருத்தல். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்று படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

4. இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு விண்ணப்பதாரிகள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கட்டாயம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) குடியுரிமை :- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) வயது :- விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) உயரம் :- 168 செ. மீ. (5 அடி 7 அங்குலம்) இற்கு குறையாது இருத்தல் வேண்டும்.
(ஈ) நிறை :- 52 கி. கி. இற்கு குறையாத நிறை.
(உ) மார்பு :- 76 செ. மீ. இற்கு குறையாது இருத்தல் வேண்டும்.
(ஊ) நிறப்பார்வை :- STD II
(எ) கட்புலக் கூர்மை :- இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் லென்ஸ் இன்றி).
(ஏ) குடியியல் நிலை :- விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சியின் போதும், அதிகாரமளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடம் ஆகும் வரையிலும் விண்ணப்பதாரிகள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு அடிப்படைப் பயிற்சிக்கற்கை நெறியினையும் தொடர வேண்டும். ஆட்சேர்ப்புப் பிரிவிற்குரிய அடிப்படை பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவுசெய்கின்ற பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பதில் உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றும் உபலெப்டினன்டினால் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைப்படி நிரந்தரக் கடற்படைத் தளபதியின் தீர்மானத்தின் மூலம் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெறுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

(இ) கடற்படையின் சட்டங்கள் மற்றும் ஆலோசனை ஆகியவற்றுக்கு உட்படல் வேண்டும் என்பதோடு எதிர்காலத்தில் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

(ஈ) பதவிக்கான பயிற்சிக் காலப்பகுதியினுள், பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவர் தனது நடைமுறைகளுக்கு அமைவாக எழுத்து மூலம் அனுமதியைப் பெற வேண்டும் என்பதோடு அதுவரை காலமும் அப் பயிலிளவல் உத்தியோகத்தருக்காக இலங்கைக் குடியரசு மேற்கொண்ட அனைத்து செலவினங்களையும் அவரது தாய்/ தந்தை அல்லது பாதுகாவலர் இலங்கை குடியரசிற்கு மீளச் செலுத்த வேண்டும்.

(உ) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒருவர் தனது பயிற்சிக் காலத்தில் எந்தவொரு நேரத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது தான் பொறுப்புக்கூற வேண்டிய விடயம் காரணமாக அல்லது பதவிக்கு பொருத்தமற்றவர் எனப் பொறுப்புக் கூற வேண்டியவர்களால் தீர்மானிக்கப்பட்டால், அச்சந்தர்ப்பத்தில் உரிய பயிலிளவல் உத்தியோகத்தரின் பிணையாளிகள்/ பாதுகாவலர்களினால் அதுவரை காலமும் அப்பயிலிளவல் உத்தியோகத்தருக்காக மேற்கொண்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை கடற்படைக்கு மீள் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் கடற்படைத் தளபதியுடன் முறி ஒன்றிற்கு உட்படல் வேண்டும்.

(ஊ) பயிற்சிக் காலத்தினுள் விபத்துகளின் போது மற்றும் நீண்ட கால ஊனங்களின் போது நடைமுறையில் உள்ள கடற்படை காப்புறுதியின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுவதோடு, அது தொடர்பாக விஷேட நஷ்டஈட்டை செலுத்துவதற்கோ பொறுப்புக் கூறுவதற்கோ கடற்படை கட்டுப்படாது.

6. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்** .- 2018.01.01 ஆந் திகதியிலிருந்து 12/ 2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதன்படி

(அ) அடிப்படைச்சம்பளம்.- ரூபா 25,682.00

(ஆ) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகள்.- ரூபா 7,800

(இ) சீருடை சுத்தப்படுத்தலுக்கான கொடுப்பனவுகள்.- ரூபா 255.00

(ஈ) கஷ்டப் பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் (செயற்பாட்டுப் பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(உ) கஷ்டப் பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் (செயற்பாடற்ற பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(ஊ) ஏனைய மேலதிக படிகள் : விசேட கொடுப்பனவுகள் ரூபா 1,000 ;

(எ) தகைமைக் கொடுப்பனவுகள் : ரூபா 637.50

**குறிப்பு**.- 2020.01.01 ஆந் திகதியன்று பயிலிளவல் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபா 32,380 ஆவதோடு 2016.01.01 ஆந் திகதி அடிப்படைச் சம்பளமானது பின்வருமாறு திருத்தத்திற்கு உட்படும்.

2018.01.01 - ரூபா 25,682.00 - இணக்கக் கொடுப்பனவு ரூபா 3,080.00

2019.01.01 - ரூபா 29,031.00 - இல்லை

2020.01.01 - ரூபா 32,380.00 - இல்லை

7. பயிற்சியினைப் பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் உரித்தாகும் வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள்.

(அ) வருடம் ஒன்றிற்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு 3 சோடிகள் (அலுவலர்கள், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள்) உரித்தாகும்.

(ஆ) முகாமில் வசிக்கும் உத்தியோகத்தர்கள் தமது வீட்டிற்குச் செல்வதற்கும் மீண்டும் மீண்டும் வருவதற்கும் மேலதிக ஆணைச்சீட்டுக்கள் மற்றும் பஸ் கட்டணம் வழங்கப்படும். (கடற் படையின் பஸ் சேவை நடைமுறைப்படுத்தப்படாத பிரதேசங்களுக்காக).

(இ) சீருடை மற்றும் அது தொடர்பான உருப்படிகள் இலவசமாக வழங்கப்படும்.

(ஈ) வைத்திய வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

(உ) ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப விண்ணப்பிக்க முடிவதோடு அவ்வாறு வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள் உரித்தாகும்.

**8. விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் மேலதிக பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படாததுடன், விளையாட்டுப் பிரிவில் தனிப் போட்டி நிகழ்ச்சிகளில் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் வெளிக்காட்டிய திறமைகள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் விஷேடமாகக் கவனத்தில் கொள்ளப்படும்.

(ஆ) மேற்கூறப்பட்ட 3 மற்றும் 4 ஆம் தொடர் பந்திகளில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் மற்றும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

(இ) இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு சேர் ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தில் இணைந்த பட்டப் பாடநெறிகளை அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப் பாடநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும்.

(ஈ) எவரேனும் விண்ணப்பதாரியின் உயரம்/மார்பு குறிப்பிட்டதன்படி காணப்படாதவிடத்து கடற்படை சேவைக்குப் பயன்படும் விஷேட தேர்ச்சி ஒன்று இருப்பின் கடற்படைத் தளபதியின் அனுமதியின்படி அவ் விண்ணப்பதாரி தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் உறுப்புரைகளைப் பின்பற்றல் வேண்டும்.

(ஊ) பின்வரும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தில் உள்ள சகல பந்திகளையும் முடிந்த வரையில் தெளிவான கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது 2019.01.25 ஆந் திகதி 12 மணிக்கு கிடைக்கப்பெறும் வகையில் "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படை தலைமையகம், த. பெ. 593, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவல் உத்தியோகத்தர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி மற்றும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும், வர்த்தமானி அறிவித் தலில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக காணப்படாத விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவலை www.navy.lk எனும் வலைத் தளத்தினூடாக அல்லது 011-2215154 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(எ) நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. ஏதேனும் விண்ணப்பப் படிவம் தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமானமை தொடர்பான முறைப்பாடுகள் ஏதும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

(ஏ) (ஆ) அரச சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ சிவில் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை/ சிவில் தாபன தலைவரூடாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் தெரிவு செய்யப்படுமிடத்து பரீட்சார்த்தியை விடுவிக்க முடியும் என்பதற்கான சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஐ) நேர்முகப் பரீட்சையின்போது அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அழைக்கப்படும் போது விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியை முன்வைக்க வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி;

(2) விண்ணப்பித்திருக்கும் பிரிவுக்கு அவசியமான தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்கள்;

(3) பாடசாலை விடுகைப்பத்திரம் ;

(4) 6 மாத காலத்தினுள் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்பப் பயிற்சி அல்லது அனுபவம் குறித்த சான்றிதழ்கள் ;

(6) அண்மைக் காலத்தில் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள், அதில் ஒன்று இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும், ஏனையவை இரண்டு வருடத்திற்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்த பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஆகவும் இருத்தல் வேண்டும்;

(7) விளையாட்டு மற்றும் பயிலிளவல் தொடர்பான சான்றிதழ்கள்.

(8) இப்பதவி தொடர்பாக விண்ணப்பதாரி அழைக்கப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையானது விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படவேண்டும்.

(ஒ) குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் இவ் ஆவணங்களை முன்வைக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் கவனத்தில்கொள்ளப்படாது.

(ஓ) சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப்பிரதியை விண்ணப்பப் படிவங்களுடன் முன்வைக்கக் கூடாது என்பதோடு விண்ணப்பப் படிவங்களுடன் இணைத்து அனுப்பப்படும் மூலப் பிரதிகளின் பாதுகாப்பினை இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

(ஔ) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் ஏதேனும் பிழை இருப்பின் அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகுதியிழப்புக்கும், தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் தண்டனை யுடனான பதவி நீக்கத்துக்கும் விண்ணப்பதாரி உள்ளாவார்.

**9. ஆட்சேர்ப்பு நடைமுறை :**

(அ) மேலே குறிப்பிட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். முதலாவது பரிசோதனையில் உயரம், கண்பார்வை மற்றும் எடை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு ஏற்ப உயரம், கண்பார்வை மற்றும் எடை என்பவற்றைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்படமாட்டார்கள். அப்பரிசோதனையில் தேர்ச்சி அடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பின்வரும் உடற்தகைமைப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும். உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரிகள் கடற்படைத் தளபதியினால் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அதன் பின்னர் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கடற்படைத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இறுதி நேர்முகப் பரீட்சை குழுமத்தின் முன்னால் தோற்றுவிக்கப்படுவர்.

(ஆ) உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள் :

| உடற்பயிற்சி | சுற்றுக்கள் | நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்) |
|---|---|---|
| 1,600 மீ. ஓட்டம் | - | 6-8 நிமிடங்கள் |
| தள்ளுதல் (Push up) | 25 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| இருத்தல் (Sit up) | 25 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| கை வளைத்தல் (Arm Bending) | 5 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| Standing Board Jump | 242 செ. மீ. அல்லது அதற்கு மேல் | - |
| கயிறு இழுத்தல் (Rope Climbing) | - | - |
| Shuttle Run | - | 11 செக்கன்கள் |

(இ) நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை நடைபெறும் தினம், நேரம் மற்றும் இடம் என்பன அவர்களால் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான போக்குவரத்துச் செலவு அல்லது வேறு செலவுகள் வழங்கப்படமாட்டாது.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைக் கடற்படையின் மருத்துவச் சபையினால் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி ஒருவரை பரிந்துரை செய்யக் கருதும் எவரேனும் அவ்வாறு செய்ய வேண்டியது விண்ணப்பதாரிக்கு சான்றிதழ் அளிப்பது மூலமாகும். விண்ணப்பதாரி ஒருவரை தெரிவு செய்வது தொடர்பாக ஏதேனும் முறையிலோ தூண்ட அல்லது வலியுறுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரி தகைமை அற்றவராவதற்கு காரணம் ஆகும்.

(ஊ) ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான தகைமை அற்ற அடிப்படை நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டார்கள்.

(எ) விண்ணப்பதாரிகளால் முன்வைக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களம் மற்றும் அது தொடர்பான நிறுவனங்களுடன் இணைந்து அவற்றின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

(ஏ) சகல விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவுச் சான்றிதழானது கடற்படை தலைமையகத்தின் மூலம் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

10. இலங்கை கடற்படைக்கு பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடைமுறையில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கடற்படைத் தளபதிக்கு உரித்தாவதோடு தேசிய பாதுகாப்பு, கடற்படைப் போர் மற்றும் நிர்வாகத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மேலுள்ள தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் இறுதித் தீர்மானம் கடற்படைத் தளபதிக்கு உரித்தாகும்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

எஸ். எஸ். ரணசிங்க,
டபிள்யூடபிள்யூவீ, ஆர்டபிள்யூபீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ,
என்டீசீ, பீஎஸ்சீ, ஓடபிள்யூசீ,
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தரக் கடற்படை பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்**

1. குடியுரிமை :----.

(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடவும்).

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) :----.

3. முழுப்பெயர் :----.
(தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தபால் முகவரி :----.

7. பிறந்த திகதி :----.

8. வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.
(2019.01.25 ஆந் திகதியன்று)

9. உயரம் : ---- (செ. மீ.) மார்பு : ---- (செ. மீ.) நிறை : ---- (கி. கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் :----.

11. மாவட்டம் :----.

12. தேர்தல் தொகுதி :----.

13. கிராம அலுவலர் பிரிவு :----.

14. தொலைபேசி இலக்கம் :----.

15. குடியியல் நிலை :----.

16. பால் :----.

17. கல்வி கற்ற பாடசாலைகள் :----.

18. கல்வி கற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல் கலைக்கழகத்தின் பெயர் | தோற்றியுள்ள பரீட்சைகள் | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) :<br>க. பொ. த. (உ. த.) :<br><br>வேறு : | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |
| | | | |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. இப்பதவி தொடர்பாக உள்ள விசேட தகைமைகள் :----.

22. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் தரங்கள் தொடர்பான விபரங்கள் :

23. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைகள் (திகதிகளுடன் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

24. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப் படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னர் வகித்த சேவைகள் :----.

25. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் முடிவுகளையும் குறிப்பிடவும் :----.

27. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் சிவில் வியாபாரங்கள் மற்றும் கம்பனிகள் உள்ளடங்கலாக) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத்தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்) :----.

28. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்படி வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கு எட்டியவரை சரியானவை என்று உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும் கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12-433

---

**அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு**

**சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர் - II தரத்திற்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) -2018**

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் II ஆம் தரத்திற்கான (கெபிதிக்கொள்ளாவ, ஹிங்குராங்கொடை, சியபாலாண்டுவை, வெள்ளவாய போன்ற அலுவலகங்களில் காணப்படும்) 04 வெற்றிடங்களுக்காக தகைமையானவர்களைத் தெரிவு செய்வதற்காக இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பத்தை தயார் செய்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர், சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் இல. 35 ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, பொரல்ல, கொழும்பு 08 எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவான எழுத்தில் எழுத வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2019.01.15 ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதமோ தபாலில் காணாமல் போதல் அல்லது காலதாமதமடைதல் என்பன தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை காலதாமதம் செய்வதன் மூலம் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை.-**

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் பொது நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் உயர் புள்ளிகளின் அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நியமனம் பெற்றுக்கொடுக்கும் திகதி சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் தீர்மானம் செய்வார்.

02. **சேவையில் அமர்த்தப்படுதற்கான நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு அமையும் வகையில் தாங்கள் அது தொடர்பாகப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்தப் பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரச நிர்வாக சுற்றறிக்கை 1/ 2014 இற்கு அமைவாக (5) வருடங்கள் கடந்து செல்லமுன் அரச கொள்கைகளுக்கு அமைவாக இரண்டாம் அரசகரும மொழித்தேர்ச்சியை அடைந்துள்ளதாக நீங்கள் நீரூபிக்க வேண்டும். நீங்கள் இந் நியமனத்திற்காக தகைமைகளை சிங்கள மொழியில் பூர்த்திசெய்திருப்பின் உங்களது இரண்டாம் அரசகரும மொழி தமிழ் மொழியாகும். அதே போன்று நீங்கள் இந்நியமனத்திற்காக தகைமைகளை தமிழ் மொழியில் பூர்த்தி செய்திருப்பின் உங்களது இரண்டாம் அரசகரும மொழி சிங்கள மொழியாகும். மேலும் நீங்கள் இந்நியமனத்திற்கான தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருப்பின் தங்களின் தற்றுணிபின்படி அரசகரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சிபெறவேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

03. **சம்பள அளவுத் திட்டம்.-** 3/2016 ஆம் இலக்கம் கொண்ட பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப, MN-3-2016 ரூபா 34,605-10 × 660-11 × 755-15 × 930- ரூபா 63,460 சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். அந்த சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

4. (i) **கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட குற்றவியல் தொடர்பான விசேட பட்டம்/சமூகவியல் தொடர்பான விசேட பட்டம்.

அல்லது

சட்டம் தொடர்பான பட்டம்

அல்லது

உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாக இருத்தல்.

05. **முன் அனுபவம்.-** சம்பந்தப்பட்ட துறையில் உள்ளமுன் அனுபவம் கூடுதல் தகுதியாக கருதப்படும்.

06. **வயதெல்லை.-** விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

07. **உடல் தகைமைகள்.-** சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வேறுதகைமைகள்.-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலன்களைப் பெற்றிருத்தல் வேண்டும்

(iii) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான எல்லா தகைமைகளையும் சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. **நேர்முகப் பரீட்சை.-** சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மூலம் நியமிக்கப்படும் நேர்முக பரீட்சை குழுவினால் புள்ளிகள் வழங்கப்படும்.

09. **நேர்முகப் பரீட்சை புள்ளிகள் வழங்கப்படும் விதம்**

| | | | |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | 1. சமூகவியல்/குற்றவியல்/சட்டம் சம்பந்தமான முதுகலைப் பட்டம் | 25 | |
| | 2. வேறு முதுகலைப் பட்டங்கள் | 20 | |
| | 3. முதுகலை பட்ட டிப்ளோமா பாடங்கள் | 15 | |
| | 4. சமுதாயஞ்சார் சீர்திருத்த டிப்ளோமா பாடம் | 10 | |

| | | | |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில் தகைமைகள்**<br>1. அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட போதை ஒழிப்பு/ சமூகவேலை உளவளத்துறை பற்றி பெறப்பட்ட டிப்ளோமா அல்லது குற்றவியல் டிப்ளோமா (ஒன்றுக்கு 5 புள்ளிகள்)<br>2. சமூக நலன்புரி மற்றும் போதை ஒழிப்பு மற்றும் உளவளத்துறை பற்றி பெறப்பட்ட சான்றிதழ் பாடங்கள் (ஒன்றுக்கு 3 புள்ளிகள்) | 10 | 10 |
| 03 | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தாய் மொழி இல்லாமல் வேறுமொழியில் பட்டம் பெற்றிருத்தல்<br>2. ஆங்கிலம் / தமிழ்/ சிங்களம் டிப்ளோமா பாடங்கள் (தாய் மொழி அல்லாத வேறு மொழிகளுக்கு ஒரு மொழிக்கு 10 புள்ளிகள் இரண்டு மொழிகளுக்கு 15 புள்ளிகள்)<br>3. ஆங்கிலம் / தமிழ்/ சிங்களம் சான்றிதழ் (தாய் மொழி அல்லாத வேறுமொழிக்கு ஒருமொழிக்கு 05 புள்ளிகள் இரண்டு மொழிக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும் | 15<br>15<br>10 | 15 |
| 04 | **முன் அனுபவம்**<br>(புனர்வாழ்வு/நன்னடத்தை/சமூகநலன்புரி/சட்டம்/சமுதாயஞ்சார் சீர்திருத்தம் அனுபவங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தவும்)<br>1. 05 வருடத்திற்குமேல்<br>2. 04 வருடத்திற்குமேல்<br>3. 03 வருடத்திற்குமேல்<br>4. 02 வருடத்திற்குமேல்<br>5. 01 வருடத்திற்குமேல்<br>6. 06 மாதத்திற்குமேல் | 30<br>30<br>25<br>20<br>15<br>10<br>05 | 30 |
| 05 | **கணினிஅறிவு**<br>1. ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச நிர்வனத்தினால் 12 மாதத்திற்கு குறையாமல் பெற்றுக்கொண்ட டிப்ளோமா<br>2. 09 மாதம் அல்லது 06 மாதத்திற்கு மேலாக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்<br>3. 03 மாத்திற்கு மேலாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணினிச் சான்றிதழ்<br>4. வேறு கணினிச் சான்றிதழ்கள்<br><br>நேர்முகப் பரீட்சையின் போதுகாட்டும் திறமை | 15<br>15<br>10<br>05<br>03<br><br>05 | 15 |

மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப் படிவங்கள் அமைய வேண்டும். 22 -29 செ.மி. அளவுடைய A4 கடதாசியில் தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்தல் வேண்டும். சகல விதத்திலும் அடிப்படை தகுதிகளை கொண்டிராத மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் அல்லது இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை வைத்திருப்பது நல்லது. விண்ணப்பப்படிவங்கள் கிடைத்ததாக அறியதரமாட்டோம்.

**கவனிக்க வேண்டியது.-**

1. சான்றிதழ்களின் முதல் பிரதியை கேட்கும் போது காண்பிக்க தவறுபவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
3. அரச சேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் மாற்றங்களுக்கு நீங்கள் உடன்படவேண்டும்.

(இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள வாசகம் மேலோங்கிநிற்கும்)

ஆர். பீ. எஸ். சமன்குமாரி,
ஆணையாளர்.

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்,
2018, திசெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு

**சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர் - II ஆம் தரத்திற்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) -2018**

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.

   முழுப்பெயர் (சிங்களம் /தமிழ்) :----.

   முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் /தமிழ்) :----.

3. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

   நிரந்தர முகவரி (ஆங்கிலம்) :----.

4. பால் (பெண்/ஆண்) :----.

5. குடியியல் நிலை (விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை :----.

6. தேசிய அடையாள அட்டை இல. :----.

7. பிறந்த திகதி : வருடம் :----, மாதம் :----, திகதி :----.

8. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

9. தொலைபேசி இலக்கம் :----.

10. கல்வித் தகைமைகள்

    பட்டம் :----.

    பல்கலைக்கழகம் :----.

    பட்டம் பெற்ற திகதி :----.

| இல. | தகைமை | நிறுவனம் | தகைமை பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

03. மேலதிக தகைமைகள் :

| இல. | தகைமை | நிறுவனம் | தகைமை பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

04. **தொழில் தகைமை**

| இல. | தகைமை | நிறுவனம் | தகைமை பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

05. வேறு தகைமை :----.

06. அனுபவம் :----.

07. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ........................ ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

09. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சிபாரிசு**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி .............................. அவர்கள் தற்போது .............................. பதவியில் சேவையாற்றுகிறார் என்றும் அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை என்றும் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை எனவும், அவர் இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழு பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

12-492

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT FOR THE SUPPLY OF 4,300
Nos. INVERTERS 110V , 20W DC TO
TO SRI LANKA RAILWAYS
Procurement No.: SRS/ F.7575

1. கொழும்பு 10, இலங்கைப், புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர், இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக 4,300 Nos. Inverters 110V , 20W DC இன் வழங்கலின் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்தம் விலைமனுக்களை பதிவுடைய தர அங்கீகாரம் பெற்ற அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட முகவரூடாக அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2019.01.10 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப.2.00 மணிக்கு மூடப்படும்.

3. 2019.01.09 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப.3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 3,200 ஐ மாத்திரம் இலங்கை ரூபாவில் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகையை செலுத்திய பின்னர், இலங்கை,

கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரம் முடிந்த பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, த.பெ.இல. 1347, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தாபலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த.பெ.இல.1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 அல்லது
94 (11) 2436818 .
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர் ,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/F. 7575

12- 354

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

### Procurement for the Supply of 20 km Armoured underground shield signal Transmission Cable and 65,000 meters of Armoured underground Cable 16x1.5 $mm^2$ - Procurement No.:- SRS/ F.7611

1. இலங்கை, கொழும்பு இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்களப் பெறுகைக்குழுவின் ( உயர் மட்டம்) தலைவர், இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக 20km Armoured Underground Shield Signal Transmission Cable and 65,000 meters of Armoured underground Cable 15x1.5 $mm^2$ ஆகியவற்றின் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்தம் விலைமனுக்களை பதிவுடைய தர அங்கீகாரம் பெற்ற அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட முகவரூடாக அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2018.12.20 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு மூடப்படும்.

3. 2018.12.19 ஆந் திகதி இலங்கை நேரம் பி.ப.3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 10,150 இலங்கை ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தாபலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த.பெ.இல.1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த.பெ. இல.1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 அல்லது
94 (11) 2436818 .
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர் ,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல. : SRS/F. 7611

12- 355

---

## மஹவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சு ( காணிப் பிரிவு)

இலங்கை நில அளவைத் திணைக்களம்

### விலைமனுக் கோரல்

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2019

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2018.12.20 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | விலைமனு பெற்றுக் கொள்ளும் அலுவலகம் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | களிகமுவ | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | களிகமுவ நகருக்கு அண்மையில் | 2019.01.01 |
| தென் மாகாணம் | மாத்தறை | கொட்டபொல | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | கொட்டபொல நகருக்கு அண்மையில் | 2019.02.05 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் இருத்தல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “ பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)” எனக் குறிப்பிட்டு 2018.12.20 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2018.12.03.

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2019**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப்பெயர் :----.

02. முகவரி :----.

03. தொலைபேசி இலக்கம் :----.

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது?

02. மாதாந்த வாடகைத் தொகை ?

03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:

04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ :

05. இடத்தின் விஸ்தீரணம் :

06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :

07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?

08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?

09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ):

10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை :

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12-446

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர் : நேச்சர் ஹோல்டிங்ஸ் லிமிடட்

பதிவிலக்கம் : PB 382

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 2018.11.05

கம்பனியின் புதிய பெயர்: நேச்சர் ஹோல்டிங்ஸ் ( பிறைவட் ) லிமிடட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

பீ.ஆர் . செக்ரடேரியல் சேர்விசஸ்
( பிறைவட் ) லிமிட்டட்,
பணிப்பாளர்.

12-163

---

## சத்துட்டு நிவஹன லங்கா ( பிறைவட் ) லிமிட்டட்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

சத்துட்டு நிவஹன லங்கா (பிறைவட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி பீவி 00206048 என்ற இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் , புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலவத்தின் முகவரியானது இல. 16-03, 16 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம் , கொழும்பு 01 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்.

என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் ( பிறைவட் ) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்,
( 5 ஆம் மாடி),
இல. 02, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

12-228

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

